ஓம் சரவணஜோதியே நமோ நம

குரோதி ஆண்டு மாசி திங்கள் பௌர்ணமி நன்னாளில்

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி விளக்கம்**

14.03.2025

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுகப் பெருமானை வணங்கி
பொருள்பட அரங்கமகா ஞானியர் யானும்
புகலுவேன் குரோதி ஆண்டு சால் திங்களுக்கான முழுமதி ஆசி விளக்கம்

2. விளக்கமதும் என் சீடர் பெருமக்கள்
விரும்பி இனிதே கேட்க
கலக்கமற தொண்டர் படைகளெல்லாம்
கருணையே வடிவாக இந்த கலியுகத்தில்

3. அரங்கன் என் தர்ம சேவையை
சேவையை உலகமெங்கும் நிரம்பும் வண்ணம்
சிறப்பாய் செய்து மகிழவும்
தொண்டர்களெல்லாம் பாதுகாப்பாய் இயங்கவும்

4. அரங்கன் என் பரிபூரண ஆசியும்
பரிபூரணமான பாதுகாப்பும் உண்டு உண்டு
அப்பனே இத்தலைமை பீடமாம்
ஏழாம் படை வீடு ஓங்காரக்குடிலில்

5. நேற்றைய தினமும் இன்றைய தினமும்
என் தொண்டர் பெருமக்கள்
குடிலின் நிர்வாகமும் செய்த
ஏற்பாடுகளும் தர்மமும் சேவைகளும்

6. மிக சிறப்பானதாகும் அரங்கன் யான்
கண்டு வியந்து மகிழ்ந்தேன்
ஆற்றல்பட அருளமுதாக அமுதிலும் ஆற்றல் கூட்டி
வந்து சென்ற அன்பர்களுக்கெல்லாம் பரிபூரண ஆசியும்

7. சூட்சுமமாய் ஜோதி வடிவில் காட்சியும்
அற்புதங்களும் தந்துள்ளேன்
உள்ளபடி அரங்கன் என் ஆசியோடு
உலகத்தில் ஓங்காரக்குடில் நோக்கி

8. வருகின்ற அன்பர்கள் அனைவருக்கும்
மிகையாக நற்பலன்களையும்

மேலான வளர்ச்சியும்
அவரவர் விரும்புகின்ற வகையிலும்

9. நல்ல முன்னேற்றமும் தொழில்
தனகீர்த்தியும் உயர்வும் தந்து
அருள் புரிவேன் நோய் நொடியில்லாத
பெருவாழ்வு காணவும் அன்பர்கட்கு

10. அரங்கன் யான் அருள் புரிவேன்
அப்பனே ஓங்காரக்குடிலின்
நிர்வாகம் சிறப்பானது
உத்தமமாய் ஒவ்வொரு கிளைகளுமே

11. அரங்கன் என் கட்டளையாக ஏற்று
நிர்வாகத்தின் செயல்பாடுகளின் கீழ்
அன்போடும் பணிவோடும்
பேராதரவோடும் நடந்து கொண்டு

12. உயர்வான ஞானிகள் பூஜையை
உத்தமமாய் ஒவ்வொரு கிளைகளும்
சிறப்பாக செய்து வர
அரங்கன் யான் அனைத்து கிளைகளிலும்

13. ஆற்றலாக இறங்கி பேரருள் புரிவேன்
தர்மம் வளர ஆங்காங்கே
தாராள தனபுழக்கத்துக்கும்
உயர்வான அன்பர்கள் ஒத்துழைப்புக்கும்

14. உத்தமமாய் தொண்டர்கள்
பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும்
நல்ல முனைப்போடும் ஆற்றலாகவும்
இயங்கிடவும் அரங்கன் யான் அருள் செய்வேன்

15. என் அருளாசியாலே ஓங்காரக்குடிலின்
இந்த சன்மார்க்க நெறி
உலகமெங்கும் பரவி
ஒவ்வொரு தேசத்திலும்

16. கிளை சங்கங்கள் மிகுந்த வண்ணம் பரவி
இனிதே எல்லா திக்கிலும்
அரங்கன் என் நாமஜெபம் முழங்க
இந்த உலகம் ஞான உலகமாக

17. ஞானிகள் ஆட்சி வருகின்ற வண்ணம்
ஞானசித்தர் காலமுமாக மாறி
அற்புதங்கள் நிகழக் கூடும்
அரங்கன் யான் பேராற்றல்பட

18. ஜோதி வடிவாக வெளிப்பட்டு
ஆங்காங்கே என் சீடர் மக்கள்
ஏற்றுகின்ற ஜோதியிலே
பரிபூரணமாய் நிரம்பி

19. அற்புதம் நிகழ்த்துகின்றேன்
அன்னதனால் பிரணவக்குடில்
நோக்கி வந்து தர்மத்தில்
தொடர்பு கொண்டு உயர்வான

20. அரங்கன் யான் வகுத்த
தீட்சைகளெல்லாம் ஏற்றுக் கொண்டு
அன்பர்கள் இனிதே சன்மார்க்க நெறி வழி
சுத்த சைவ நெறிபட

21. உயர்வாக வாழ்வில் அரங்கன் என்பால்
சத்தியம் செய்து அன்பர்களெல்லாம் நடக்க
கருணையே மிகுந்த வாழ்வாகவும்
கலியுகத்தில் அவர்களெல்லாம் தர்மவான்களாகவும்

22. அரங்கன் யானே தேர்வு செய்து
பாதுகாக்கின்ற ஞானவான்களாகவும் சிறந்து
அரங்கன் என் நாமஜெபம்
சொல்லும் அன்பர்களெல்லாம்

23. இந்த கலியுகத்தில் ஞானிகளாகும்
வண்ணம் மாற்றம் நிகழக் கூடும்
அரங்க மகான் யான் சர்வ பாதுகாப்பாய்
பிரணவக் குடிலில் எல்லாமுமாக நிரம்பியிருக்கின்றேன்

24. அன்னதனால் அன்பர்களின் உயர்வான தொண்டும்
அன்பர்களின் உயர்வான பொருளுதவியும்
அரங்கன் என் அங்கீகாரத்தோடு
அனுமதியோடும் ஆசியோடும்

25. ஆற்றல்பட மகா சக்தியாக நிரம்பி
வருபவர்க்கு பெரும் பலம் கூட்டும்

வரும் அன்பர்களெல்லாம் மனநிறைவும்
தெளிவும் ஞானமும் சன்மார்க்க நெறிவிட்டு

**26.** அகலாத வண்ணம் பரிபூரண மகா சக்தியாக நிரம்பி
அரங்கன் என் வழிகாட்டலில்
வருவோரெல்லாம் கடைத்தேறக் கூடும்
அரங்கமகான் யான் அருளிய முழுமதி கால அருளாசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி